DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 250/2015 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 8 |
| Name | : பூங்கொடி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.02.2024.

- - - - - - -

1ம் எதிரி ஆஜர். 2 முதல் 6 எதிரிகள் ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் சம்பவத்தின்போது, உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். 14.04.2014 ஆம் தேதி, 20.30 மணிக்கு நான் நிலையப் பொறுப்பிலிருந்தபோது, மதுரை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசனைப் பெற்று மதுரை அரசு மருத்துவமனைக்குச் சென்று 21.30 மணிக்குச் சென்று, கல்கொண்டான்பட்டி காலனியைச் சேர்ந்த பெருமாத்தேவர் மகன் ஆனந்தன் வயது 45 என்பவர் கொடுத்த வாக்குமூலத்தைப் பெற்று, 14.04.2014 ஆம் தேதி 23.30 மணிக்கு உத்தப்பநாயக்கனூர் காவல் நிலையம் வந்து, காவல் நிலையக்

குற்ற எண். 62/2014, பிரிவுகள் 147, 148, 294 பி, 323, 324, 307 இதச வாக வழக்குப் பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு முதல் தகவல் அறிக்கையை அனுப்பிவைத்தேன். வழக்குக் கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை -

1ம் எதிரிக்கும், அ.சா.1 க்கும் அ.சா.1 மாயி என்பவரிடம் 22 சென்டை ஒரு வருடத்திற்கு முன்பு வாங்கியதால் அந்த இடத்தை 1ம் எதிரி வாங்க நினைத்ததாகவும், அதனால் இரு குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்ததாக புகார் வாக்குமூலத்தில் இடம்பெற்றுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மூக்கன் தோட்டத்திற்கு அ.சா.1-னுடன் மொத்தம் 4 பேர்கள் குளிக்கச் சென்றதாக வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாக்குமூலத்தில் வேறு யாரும் சாட்சிக் கையெழுத்துப் போடவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி அ.சா.1 வகையறா மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு, குற்ற எண். 63/2024 ஆக நான்தான் வழக்காகப் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். 2 பிரிவினருக்குள் ஏற்பட்ட வாய்த்தகராறில் அ.சா.1 பொய்யாக கொடுத்த வாக்குமூலத்தை அப்படியே நான் வழக்காகப் பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 29.02.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.